[2003 மார்ச் 27

**மாண்புமிகு திரு. அ. மில்லர்:** சாலை வசதி, விளக்குகள், பொருட்கள் பாதுகாப்பு அறை முதலிய அடிப்படை வசதிகள் செய்து தரப்படுகின்றன. 2001-2002 ஆம் ஆண்டில் கட்டமைப்பு வசதிகளை உருவாக்கும் திட்டத்தின்கீழ் தருமபுரி மாவட்டம், பாம்பாறு அணை, பூங்கா மேம்பாடு, ஓசூரில் உள்ள கேலவரப்பள்ளி அணைக்கட்டுத் திட்டப் பூங்கா மற்றும் பூங்கா மேம்பாடு, கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத்தில் உள்ள பூங்காவை அழகுபடுத்தல் ஆகிய திட்டங்களுக்குத் தலா ரூ. 20 இலட்சம் வீதம், மொத்தம் ரூ. 60 இலட்சம் சுற்றுலாத் துறையின் மூலம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மூலம் பணிகள் துவங்கப்பட்டு, நிறைவு பெறும் தறுவாயில் உள்ளன. தீர்த்த மலை, மாவட்ட உலாத் தலமாக அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது. தீர்த்த மலையில் 1988 ஆம் ஆண்டு, சுற்றுலாத் துறையால் வழங்கப்பட்ட ரூ.4 இலட்சத்தில் சுற்றுலாப் பயணிகள் ஓய்வுக் கூடம் ஒன்றும் கட்டப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 3. முன்பண மானியக் கோரிக்கைகள், 2003-2004, அளித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2003-2004 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகளைப் பேரவைமுன் வைத்தல். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, நிதிநிலை அறிக்கை மீதான பொது விவாதம் முடிகிற வரைக்கும் ஏதும் எடுத்துக்கொள்வதில்லை. 2 ஆம் தேதிக்கு மேலே எடுத்துக்கொள்ளலாம். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003-2004 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகளைப் பேரவைமுன் வைக்கின்றேன்:

2003 மார்ச் 27] [ திரு. சி. பொன்னையன் ]

## 2003-2004 ஆம் ஆண்டு உடனடிச் செலவுக்கான மானியக் கோரிக்கைகள்

| கோரிக்கை | (ரூபாய் ஆயிரத்தில்) வருவாய் | மூலதனம் | கடன் |
|---|---|---|---|
| 1 மாநிலச் சட்டமன்றம் | 3,24,47 | - | - |
| 2 ஆளுநர் மற்றும் அமைச்சரவை | 2,68,30 | - | - |
| 3 நீதி நிருவாகம் | 36,11,79 | - | - |
| 4 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை | 95,87,58 | 12,82,29 | 6,25 |
| 5 வேளாண்மைத் துறை | 154,56,52 | 1,44,32 | 14 |
| 6 கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை கால்நடை பராமரிப்பு | 44,24,63 | 1 | - |
| 7 கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை-மீன்வளம் | 13,65,48 | 74,03 | - |
| 8 கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை-பால்வளம் | 3,28,88 | - | - |
| 9 பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை | 32,93,19 | 1,31,52 | - |
| 10 வணிக வரித் துறை-வணிக வரிகள் | 111,65,02 | - | - |
| 11 வணிக வரித் துறை முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு | 20,30,21 | - | - |
| 12 கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை | 369,76,01 | 3,30,70 | 3,67,65 |

| கோரிக்கை | (ரூபாய் ஆயிரத்தில்) வருவாய் | மூலதனம் | கடன் |
|---|---|---|---|
| 13 எரிசக்தித் துறை | 68,61,80 | 6,25,00 | 53,06,25 |
| 14 சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை | 42,55,96 | 45,37,87 | - |
| 15 நிதித் துறை | 95,19,48 | - | 15,09,53 |
| 16 கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை-கைத்தறி மற்றும் துணிநூல் | 33,13,40 | - | 1 |
| 17 கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை-கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் | 14,51,27 | - | - |
| 18 மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை | 336,25,47 | 8,81,75 | - |
| 19 உயர் கல்வித் துறை | 184,20,92 | 43,27 | 13 |
| 20 நெடுஞ்சாலைகள் துறை | 247,93,86 | 357,42,54 | - |
| 21 உள் துறை-காவல் | 309,27,55 | 38,22,38 | 25,00 |
| 22 உள் துறை-தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் | 16,17,51 | - | - |
| 23 உள் துறை-சிறைச்சாலைகள் | 15,77,01 | 39,92 | - |
| 24 உள் துறை-இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்-நிருவாகம் | 10,53,98 | - | - |
| 25 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை | 27,23,71 | 20,67,45 | 27,68,91 |
| 26 தொழில் துறை | 10,33,18 | 1,00,01 | - |

| கோரிக்கை | (ரூபாய் ஆயிரத்தில்) வருவாய் | மூலதனம் | கடன் |
|---|---|---|---|
| 27 செய்தி மற்றும் சுற்றுலாத் துறை-செய்தி மற்றும் விளம்பரம் | 7,12,49 | - | - |
| 28 செய்தி மற்றும் சுற்றுலாத் துறை-சுற்றுலா | 6,56,61 | 13,14 | - |
| 29 செய்தி மற்றும் சுற்றுலாத் துறை-எழுதுபொருள் மற்றும் அச்சு | 14,93,68 | 1 | - |
| 30 தகவல் தொழில்நுட்பவியல் துறை | 2,09,22 | - | - |
| 31 தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை | 44,52,74 | 27,33 | - |
| 32 சட்டத் துறை | 2,26,94 | - | - |
| 33 நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை | 251,27,02 | 136,25,01 | 69,05,72 |
| 34 பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை | 5,58,96 | - | - |
| 35 திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை | 8,07,61 | 1,67,21 | - |
| 36 மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை | 6,63,90 | - | - |
| 37 பொதுத் துறை | 20,51,08 | - | - |
| 38 பொதுப் பணித் துறை | 194,11,31 | 211,93,82 | - |
| 39 வருவாய்த் துறை | 220,90,70 | 14,32,64 | - |
| 40 ஊரக வளர்ச்சித் துறை | 461,62,58 | 3,21,13 | - |
| 41 பள்ளிக் கல்வித் துறை | 1,045,19,99 | 5,72,96 | 2,38 |

[ திரு. சி. பொன்னையன் ] [2003 மார்ச் 27

| | கோரிக்கை | (ரூபாய் ஆயிரத்தில்) வருவாய் | மூலதனம் | கடன் |
|---|---|---|---|---|
| 42 | சிறு தொழில்கள் துறை | 15,96,76 | 53,38 | 25,00 |
| 43 | சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை | 111,20,70 | - | - |
| 44 | தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-தமிழ் வளர்ச்சி-பண்பாடு | 10,36,86 | - | - |
| 45 | தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-இந்து சமய அறநிலையத் துறை | 7,02,53 | 8,40 | - |
| 46 | போக்குவரத்துத் துறை | 37,31,82 | 4,18 | - |
| 47 | இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை | 6,54,06 | 27,80 | - |
| 48 | ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக் கால நன்மைகளும் | 1,057,42,84 | - | - |
| 49 | இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு | 196,72,40 | - | - |
| | பெருமொத்தம் | 6,034,09,98 | 872,70,08 | 159,16,97 |

## 4. அறிவிப்புகள்

### (அ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2002-2003, மொழிதல் (ஆ.செ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

*2002-2003* ஆம் ஆண்டின் கூடுதல் செலவினங்களுக்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:-

"In pursuance of clause (2) of Article 205 read with clause (3) of Article 203 of the Constitution of India, I, P.S. Ramamohan Rao, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly of the demands for further grants for the financial year 2002-2003.